# மட் /புனித சிசிலியா பெண்கள் கல்லூரி

## *இடர்கால கற்றல் ஊக்கி - வேலைப்படிவம் -02*

## தரம் -10, 11 தமிழ்மொழியும் இலக்கியமும்

☐ பின்வரும் வாக்கியங்கள் ஒன்வொன்றிலும் அடிக்கோடிட்ட எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ஏங்கக் காண்பது மங்கல பேரிகை. இங்கு பேரிகை என்பதன் ஒத்த கருத்துச் சொல்?
    1. உடுக்கு 2. முரசு 3. மேளம் 4. துந்துபி

02. பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்குக் குடியுங்கள். இங்கு சுனை என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
    1. மலையூற்று 2. ஆறு 3. ஏரி 4. வாய்க்கால்

03. கம்பியூட்டரைப் படைப்பதற்கு முன்பாகவே கடவுள் கைகளைப் படைத்திருக்கிறார் என்பதன் என் நம்பிக்கை. இங்கு நம்பிக்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
    1. நம்பிக்கையின்மை 2. துரோகம் 3. அவநம்பிக்கை 4. ஏமாற்றம்

04. மகாவிவேகி விசுவநாதபிள்ளையின் தலைமையில் கூட்டம் நடந்தது. - இங்கு விவேகி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
    1. மூடன் 2. அவிவேகி 3. முட்டாள் 4. மடையன்

05. நுளையன் என்பதன் எதிர்பாற்சொல்
    1. நுளையன் 2. நுளையி 3. நுளைச்சி 4. நுளையி

☐ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06. Black Hole என்பதற்குரிய தமிழ்க் கலைச்சொல்
    1. கருந்துளை 2. கரும்பிழம்பு 3. கருந்துவாரம் 4. வான்துளை

07. ஆமணக்குக்கு முத்து போல பலாவுக்கு
    1. மணி 2. கொட்டை 3. முத்து 4. விதை

08. கடவுளுக்கேனும் பெரியோருக்கேனும் சமர்பிக்கப்படும் பொருள்
    1. காணிக்கை 2. பரிசம் 3. மானியம் 4. கைவிசேடம்

09. கருமை, பெருமை, மயக்கம் எனும் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்
    1. மூலம் 2. திரி 3. பதி 4. மால்

10. சுருங்கை, ஓரை, மத்திகை என்பன எம்மொழிச் சொற்களாகும்?
    1. தெலுங்கு 2. கிரேக்கம் 3. கன்னடம் 4. பாரசீகம்

11. அரசனது நீதி வழுவாத ஆட்சி
    1. கொடுங்கோன்மை 2. ஊராண்மை 3. செங்கோண்மை 4. பேராண்மை

12. செய்யுளில் ஓசை குறையுமிடத்து எழுத்துக்களின் நீண்டொலித்தல்
    1. மாத்திரை 2. அளபெடை 3. நெட்டெழுத்து 4. நெடிற்றொடர்

13. விவாகத்திற்கு வரவழைக்கும் பத்திரிகை
    1. விவாக ஏடு 2. மங்கல ஓலை 3. மணவோலை 4. குடவோலை

14. சட்டதிட்டங்கள் நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் பொதுவானதாய் இருக்கவேண்டும். இங்கு சட்டதிட்டம் என்பது,
    1. இணைமொழி 2. இரட்டைக்கிளவி 3. அடுக்குத்தொடர் 4. அடுக்கிடுக்குத்தொடர்

✍ ✍ ✍ ✍ ✍ ✍